செய்தி வெளியீடு எண் : 1305 நாள் : 04.07.2023

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்களின் காலவரையறையற்ற வேலை நிறுத்த போராட்டம் வாபஸ்

தமிழ்நாடு கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்கள் சங்கம் கடந்த 26.6.2023 முதல் பல்வேறு கோரிக்கைகளை முன்நிறுத்தி காலவரையறையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

3.7.2023 அன்று மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் தலைமையில், இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., (மு.கூ.பொ) மற்றும், புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் திரு எல். நிர்மல்ராஜ், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சங்க உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் ஒரு குழு அமைத்து ஆராய்ந்து தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தை வாபஸ் பெறுவதாக சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக முடிவெடுத்து, 4.7.2023 செவ்வாய்கிழமை முதல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கல்குவாரி மற்றும் கிரஷர்களும் இயங்கும் என்று அறிவித்துள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in